# பெருவிழா அழைப்பிதழ் – 2023

## செப்டம்பர் 6 முதல் 8 வரை




குமரியின் வேளாங்கண்ணி

கேட்ட வரம் தரும்

# புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம், தூத்தூர்

அன்பு நிறைந்த நெஞ்சங்களே...

அனைவருக்கும் பெருவிழா நல்வாழ்த்துகள் ...

முக்கடலும் முத்தமிடும் குமரி மாவட்டத்தின் கடற்கரை மாதிரிக் கிராமமே தூத்தூர். குறிப்பாக சுறாமீன்பிடிப்பதில் உலகளவில் புகழ் பெற்றவர்கள் வாழும் ஊர் இது. மேலும் தமிழகத்தின் கால்பந்தாட்ட கீராமம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு, இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான **புனித தோமையாருக்கு ஆலயம்** கட்டப்பட்டுள்ளது. இதுவே இப்பகுதியின் உயர்மறைவட்ட முதன்மை ஆலயமுமாகும். மேலும், இந்தியாவின் இரண்டாவது சீடர் எனப் பெருமையாக அழைக்கப்படுகிற **புனித பிரான்சிஸ் சவேரியாரின்** புனிதப் பாதங்கள் கி.பி. 1544-லேயே பதிந்த புண்ணிய பூமி என்ற வரலாற்றுப் பெருமையும் இதற்குண்டு.

இத்திருத்தலப் பெருவிழா தாய் மரியின் ஆசீருடனும், எம் பேராயர் மேதகு. தோமஸ் ஜெ. நெற்றோ, துணை ஆயர் மேதகு. கிறிஸ்துதாஸ் மற்றும் மேனாள் பேராயர் மேதகு. சூசைபாக்கியம் அவர்களின் நல்லாதரவுடனும் வெகுச்சிறப்பாய் நடைபெறுகிறது. இவ்விழாவினை மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் மகிழ்வோடு கொண்டாடி வருகிறோம். மேலும், அனைவரும் ஒன்றாய் நல்லிணக்க விருந்து உண்பது தனிச்சிறப்பு.

உன்னத தாயின் பரிந்துரையால் நலம் பல பெற்று சாட்சிகளாய் அலை அலையாய் திருத்தலம் நாடிவரும் இறைமக்களுடன் நாளும் நடந்த நல்லவைக்கும், அற்புதங்களுக்கும் நன்றி சொல்லவும், இனியெல்லாம் நலமாய் அமையவும் வரம் வேண்டி இறைறையாசீர் நம்மில் ஊற்றெடுக்க உங்களை அன்னையின் பிறப்புவிழா நிகழவில் பங்கு பெற அகமகிழ்வோடு அழைக்கிறோம்.

## இருளகற்றி ஒளிவீசுங்கள் ! வாழுங்கள் அன்னை வழியில் !!

இவண் :

அருள்பணி. **பிரடி சாலமன்,** பங்கு தந்தை, அருள்பணி. **டோமி தாமஸ்,** உதவி பங்கு தந்தை
**அருள்பணியிலும் அர்ப்பண வாழ்விலும் இருபால் மண்ணின் மைந்தர்கள்,**
**அருள்சகோதரிகள், துறவற சபையினர், பங்கு பேரவை, பங்கு நிதிக்குழு,**
**பங்கு மக்கள், விழாகுழுவினர். தூத்தூர் மறைவட்டார மக்கள்.**

*அன்னையே மரியே!*
*அருள் நிறைந்த தாயே!*
*படகினில் வருவோர்க்குத் துணையானவளே!*
*பாதை மறந்தோர்க்கு விளக்கானவளே!*
*விடியற்காலை விண்மீனே!*
*கதிரவனாம் இயேசுவை ஈன்றவளே!*
*கானா ஊரின் கதாநாயகியே!*
*புதிய ஏற்பாட்டின் பூபாளமே!*
*பெண்குலத்தின் காவியமே!*
*தூய ஆவியின் ஓவியமே!*
*எளிமையும் தாழ்ச்சியும் நிறைந்தவளே!*
*எண்ணிலாப் நற்பண்புகள் கொண்டவளே!*
*அன்பே! அருளே! அழகே! எழிலே!*
*அமுதே! நிலவே! மலரே! மரியே!*

*மகிழ்ச்சியின் காரணமே!*
*மானுடத்தின் தோரணமே!*
*வாண வேடிக்கைகள் முழங்க*
*வண்ண விளக்குகள் ஒளிர*
*பாமாலைகள் ஒலிக்க*
*பூமாலைகள் மணக்க*
*அழகான திருத்தேரில்*
*அசைந்தாடி பவனிவரும்*
*உன் எழில் தரிசனத்தை*
*காணக் கண்கள் கோடி வேண்டும்*
*அருள் புரிந்திடுவாயே! அமல உற்பவியே!*
*அன்னையே மரியே! எம் ஆரோக்கிய மாதாவே!*
*உம்பாதம் சரணம் அம்மா*



*அனைவரும் வருக!* *இறையாசீர் பெறுக!!*



**குறிப்பு:**

பக்தர்களுக்கு அரசு மற்றும் தனியார் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

உதவிக்கு : 9489176498, 8300102414, 8667615255, 9487628113, 9994603719, 9442364586, 9487385506,9787059894, 9345231583

திருவழிபாட்டு நிகழ்வுகளை இணையம் மற்றும் நேரடி ஒளிப்பரப்பில் காணலாம்.

NILA TV

www.thoothoor.com

http://www.facebook.com/ThoothoorCOM

Nila TV

## நிகழ்வன



### 06-09-2023 புதன்

தூத்தூர் அரசு மருத்துவமனையுடன் இணைந்து வழங்கும்

**மாபெரும் இரத்ததான முகாம் & காசநோய் நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவுத் தொகுப்பு வழங்குதல்**

குறிப்பு: சாதி மத பேதமின்றி அனைவரும் பங்கு பெறலாம்


மாலை 5:00 மணி : **செபமாலை**

மாலை 6:00 மணி : **திருக்கொடியேற்றம்**

தலைமை : அருள்பணி. **பிரடி சாலமன்** பங்குதந்தை தூத்தூர்

திருப்பலி : **அருள்பணியில் மண்ணின் மைந்தர்கள்**

### 07-09-2023 வியாழன்



காலை 9:30 மணி : **முதல் திருவிருந்து திருப்பலி**

குறிப்பு: கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்கு பெறுவதுடன்
தங்கள் பங்குதந்தையின் உரிய கடிதம் பெற்று வரவும்

தலைமை : அருள்பணி. **பாபு** நெதர்லாந்து

மாலை 5:00 மணி : **செபமாலை**

மாலை 6:00 மணி : **நற்கருணை மாலை ஆராதனை**

தலைமை : அருள்பணி. **லா. டைனிசியஸ்**
பங்குதந்தை. குளச்சல், கோட்டார் மறைமாவட்டம்

மறையுரை : அருள்பணி. **யூஜின் டோனி**
செயலர், அருங்கொடை பணிக்குழு
இயக்குனர், பெஸ்கி கலை தொடர்பகம்,
கும்பகோணம் மறைமாவட்டம்.

இரவு 8:00 மணி : **தேர்ப்பவனி**

### 08-09-2023 வெள்ளி

காலை 9:00 மணி : **திருமுழுக்கு**

குறிப்பு: கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்கு பெறுவதுடன்
தங்கள் பங்குதந்தையின் உரிய கடிதம் பெற்று வரவும்

தலைமை : அருள்பணி. **டோமி தாமஸ்**
உதவிபங்குதந்தை, தூத்தூர்

மாலை 5:00 மணி : **செபமாலை**

மாலை 6:00 மணி : **பெருவிழா திருப்பலி**




தலைமை : அருள் முனைவர். **ஜெபமாலை இருதய ராஜா** சே.ச
தலைவர், இயேசு சபை சென்னை மறைமாநிலம்

மறையுரை : அருள்பணி. **மரிய அந்தோனி** க.ச
பங்கு தந்தை, பாத்திமா நகர், கோவை மறைமாவட்டம்

இரவு 8:00 மணி : **நல்லிணக்க விருந்து**

இடம் : அரசு மருத்துவமனை மைதானம், தூத்தூர்

தமிழகம் மற்றும் கேரளாவின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து அருள்தந்தையர்கள் சிறப்பிக்கின்றனர்.



புனித திருமுழுக்கு யோவான்
பங்கு – பூத்துறை



இளையோரின் பாதுகாவலர்
**புனித அலோசியஸ் கொன்சாகா சே.ச**



புனித யூதா ததேயுஸ்
பங்கு – சின்னத்துறை



புனித லூசியாள்
பங்கு – இரையுமன்துறை



புனித மரியன்னை
பங்கு – வள்ளவிளை



புனித கேத்ரினாள்
பங்கு – இரவிபுத்தன்துறை



புனித நிக்கோலாஸ்
பங்கு – நீரோடி



புனித வியாகுல அன்னை
பங்கு – மார்த்தாண்டன்துறை





செப உதவிக்கு :
**புனித தோமையார் மறைவட்டார முதன்மை ஆலயம்,**
தூத்தூர், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு - 629176
தொலை பேசி : 4651 - 240640
இணையம் : www.thoothoor.com